செ.வெ.எண்: 680 நாள்: 12.10.2019

**புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், பழைய கந்தர்வக்கோட்டை கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், பழைய கந்தர்வக்கோட்டை கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை கோட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், பழைய கந்தர்வக்கோட்டை வருவாய் கிராமத்தில் 23.10.2019 அன்று காலை 10 மணிக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு அரசுத் துறைகளினால் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பெறுவதுடன், தங்கள் குறைகள் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு செய்து பயனடையலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**